Y. M. C. A

# தெரிவுக்குழுவை இயங்கவைக்க ஜனாதிபதி முயற்சி

(கொழும்பு)

இனப் பிரச்சினைத் தீர்வு குறித்து நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை, மீண்டும் செயற் படுத்துவது குறித்து ஆராயு முகமாக ஜனாதிபதி பிரேம

[4-ம் பக்கம் பார்க்க]

விலை ரூபா 5.00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 வைகாசி 26 இதழ் 118
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 08 – 06 – 1992

## மங்களமுனசிங்கா மனமாற்றம்

[கொழும்பு]

செயலற்றுப் போயுள்ள நாடாளுமன்ற தெரிவுக் குழுவை மீண்டும் இடங்க வைக்கும் முயற்சியில் தெரிவுக் குழுவின் தலைவர் மங்கள முனசிங்கா ஈடுபட்டுள்ளார். வடக்கு கிழக்கு பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வரும்

(4-ம் பக்கம் பார்க்க)

## ஜனவரி முதல் வட-கிழக்கில் 342 படையினர் பலி

(கொழும்பு)

கடந்த ஜனவரி முதலாந் திகதியிலிருந்து இற்றைவரை வடக்கு கிழக்கு பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகளில் 342 படையினர் பலியாகியுள்ளனர்.

இத்தகவலை ராணுவ பேச்

(4ம் பக்கம் பார்க்க)

## தேர்தல் தொகுதி மீள்நிர்ணயம்:

# தமிழ்ப் பிரதேசங்களை சிங்கள பகுதியுடன் இணைக்க முயற்சி?

(கொழும்பு)

**தேர்தல் தொகுதிகளை மீள் நிர்ணயம் செய்யும் நடவடிக்கைகளை அரசு ஆரம்பிப்பதன் மூலம் தமிழ் பிரதேசங்களை சிங்கள மாவட்டங்களுடன் இணைக்கும் ஒரு தந்திர வேலையை அது ஆரம்பிக்கவுள்ளது என்று அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.**

மட்டக்களப்பு, திருகோண மலை, [illegible] மாவட்டங்களில் சிங்களக்குடியேற்றங்கள்தீவிரமாக்கப்பட்டு தமிழ்ப் பிரதேங்களை சிங்கள மாவட்டங்களுடன் இணைக்கும் செயல்பாடுகளை சிறிலங்கா அரசு மிக விரைவில் ஆரம்பிக்கக்கூடும் என தெரிவிக்கப்படுகிறது.

[illegible] தேர்தல் தொகுதிகளை [illegible] டும் நிர்ணயிக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சிங்களக் குடியேற்றங்கள் ஏற்படுத்தப்பட்ட இடங்களை பொலனறுவா, அநுராதபுரம் ஆகிய சிங்கள பிரதேசங்களுடன் இணைக்கும் ஆரம்ப நட[illegible]ணயத்தின் நோக்கமெனவும்

(4ம் பக்கம் பார்க்க)

## தெல்லிப்பழையில்— வீடுபார்க்கச் சென்றோர் மீது இராணுவம் துப்பாக்கிச் சூடு

[illegible] லிருந்து இடம்பெயர்ந்து வேறு இடங்களில் தங்கியிருந்தவர்கள் தமது இருப்பிடங்களுக்குச் சென்று வீடுகள் பார்க்க [illegible] அவர்கள் மீது அப்பகுதியில் நிலைகொண்டிருந்த படையினர் நேற்றுக்காலை 7 மணியள

[4-ம் பக்கம் பார்க்க]

## சிப்பாய் பலி!

(கொழும்பு)

குமுழமுனைப் பகுதியில் நேற்று விடுதலைப்புலிகளுடன் இடம்பெற்ற மோதலில் ஸ்ரீலங்கா இராணுவத்தைச் சேர்ந்த சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார் என்றும் ஒன்பது படையினர் காயமடைந்தனர் என்றும் கூட்டுப் படைத்தலைமையகம் அறிவித்தது.

## இந். பிரதமரின் பேத்தியை கடத்தமுற்பட்டோர் கைது

[பம்பாய்]

இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவின் பேத்தியை கடத்துவதற்காக திட்டம் தீட்டிய சீக்கிய போராளிகள் என சந்தேகிக்கப்படும் 4 பேரை பொலிசார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இவர்

[4-ம் பக்கம் பார்க்க]

## ஐ.தே.க. - சுதந்திரக்கட்சி கருத்துவேறுபாடுகள் தீரும்

(கொழும்பு)

ஆளும் ஐ. தே. கட்சிக்கும் பிரதான எதிர்க்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்குமிடையே நிலவும் அபிப்பிராய கசப்புணர்வுகள்அடுத்த வாரத்தில் தீர்த்து வைக்கப்படும் அறிகுறிகள் தென்படுவதாக கொழும்பு அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

கட்சிகளுக்கிடையிலான கருத்துவேறுபாடுகள் தீர்த்து வைக்கப்பட்டதும் இம்மாதம் 20ம் திகதிக்குப்பின்னர் நாடாளுமன்ற தெரிவுக்குழு கூட

(4ம் பக்கம் பார்க்க)

## தென்பகுதி வெள்ளத்தில் 14 பேர் பலி

(கொழும்பு)

கொழும்பிலும் அயல்சுற்றுப் புறங்களிலும் தொடர்ச்சியாக பெய்த அடைமழை காரணமாக 14 பேர் வரையில் பலியாகியுள்ளதாகவும், சுமார் 100 கோடி ரூபாவுக்கு மேல் சேதம் மேற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

[4-ம் பக்கம் பார்க்க]

## புவி உச்சி மாநாடு; ஒப்பந்தத்தில் கைச்சாத்திட புஷ் மறுப்பு

(றியோடி ஜெனரோ)

உலகச் சுற்றுப்புறச் சூழல் மாநாட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட மறுக்க அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷை கையெழுத்திடுமாறு, உலகச் சுற்றுப்புறச் சூழல் மாநாட்

(4-ம் பக்கம் பார்க்க)

## சிறிமாவின் அதிகாரங்களை குறைக்க நடவடிக்கை

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் அதிகாரங்களைக் குறைப்பது குறித்து ஆலோசனை தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும், இந்த ஆலோசனைக்கு, கட்சியின் உயர் மட்டங்களில் அதிக ஆதரவு பெருகி வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கட்சியின் மத்திய செயற்குழுவைத் தேர்ந்தெடுக்கும் அதிகாரங்களைக் கட்சியின் நாடாளுமன்றக் குழுவிடம் ஒப்படைக்கும் முகமாகவே திருமதி பண்டாரநாயக்காவின் அதிகாரங்களைக் குறைப்பது பற்றி ஆலோசிக்கப்பட்டு வருவதாகக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (க)

## அகதிகள் வருவதை ஜெர்மனி மேலும் கட்டுப்படுத்துகிறது

(பேர்லின்)

ஜெர்மனிக்கு அகதிகள் வருவதை தடுக்கும் வகையில் புதிய சட்டம் ஒன்றை ஜெர்மனிய நாடாளுமன்றம்கடந்த வெள்ளிக்கிழமை நிறைவேற்றியுள்ளது.

இதன்படி ஜெர்மனியின் தங்கு சட்டங்களை மேலும் கடுமையானதாக்கவும் அங்கு தங்கியிருப்பதற்கு அகதிகள் சமர்ப்பிக்கும் விண்ணப்பங்களை விரைவில் பரிசீலனை செய்வதற்கு ஏதுவாகவும் அவர்களை தங்கவைப்பதற்கு பாரிய முகாம்களை அமைப்பதற்கு வழிகோலும் வகையிலான சட்டம் ஒன்று ஜெர்மனியில் நிறைவேற்றப்பட்டுள்ளது. (க)

# தமிழ் மக்களை நிரந்தர அகதியாக்குவதும் புதிய அகதிகளை உருவாக்குவதுமே அரசின் நோக்கம்

(கொழும்பு)

வடக்கு கிழக்கு பகுதியில் மேற்கொள்ளப்படும் ராணுவ நடவடிக்கைகளால் பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்களை நிரந்தர அகதிகளாக்க அரசு முயற்சிப்பதாகவும் மேலும் புதிய அகதிகளை உருவாக்கி வருவதை அது நோக்கமாகக் கொண்டிருப்பதாயும் கொழும்பிலுள்ள பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்கள் நெருக்கமாக வாழ்ந்து வருகிறார்கள். அத்துடன் தீவுப்பகுதி, வலிகாமம் வடக்கு போன்ற இடங்களில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகளால் அப்பகுதி மக்களும் யாழ்ப்பாணத்தில் உள்ள அகதி முகாம்களிலும், உறவினர் வீடுகளிலும்

(4ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

### நாடகநூல்கள்

200க்கும் அதிகமான வானொலி நாடகங்களும், 22 மேடை நாடகங்களும் எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் நூல்கள். கெட்டிக்காரர்கள் 25/- முதலாம் பிள்ளை 30/- 19 நாடகங்கள். (சி-6370)

### வெளிவந்துவிட்டது

பொருளியல் I & II புள்ளி விபரங்களுடன் கூடிய கடந்த கால A/L பரீட்சைக்கான 243 வினாக்கள் தொகுப்பு: க. அருந்தவபாலன் B. A டிறிபேக் கல்லூரி சாவகச்சேரி. வெளியீடு சோதிவெளியீட்டு வாரியம். ஏக விநியோகஸ்தர்கள், ஸ்ரீலங்கா புத்தகசாலை, 234, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு) விலை: 33/ ரூபா மட்டுமே. (எ-2195)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

### O/L கணிதம்

92 பரீட்சையில் ஒரே தரத்தில் Credits பெறுபேறுடைய அனுபவமுள்ள B Sc, (Cey.) ஆசிரியரால் கற்பிக்கப்படும். 85, சிவன்கோவிலடி, திருநெல்வேலி. (சி 6391)

## விசேட கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் வலிகாமம் வடக்கு பிரிவுச் சங்கத்தின் விசேட கூட்டம் 12ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9-30 மணிக்கு சங்க அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

## கஷ்ட நிவாரணம் வழங்கப்படவில்லை

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்ட விலைமதிப் புத்திணைக்கள ஊழியர்களுக்கு கடந்த 1991ம் ஆண்டுக்குரிய கஷ்ட நிவாரணப்பணம் இதுவரையும் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (154)

## ஆதன வரி மதிப்பீடு

(கொழும்புத்துறை)

யாழ் மாநகர சபை எல்லைக்குள் இருக்கும் ஆதனங்களின் வரிமதிப்பு வேலைகள் யாவும் பூர்த்தியடைந்துள்ளன.

இதனையடுத்து யாழ். மாநகர சபையின் வரி மதிப்பு அறிவித்தல் வரியிறுப்பாளர்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றது. (154)

## கொடியேற்றம்

(வட்டுக்கோட்டை)

அராலி-வடக்கு பயிலியற்புலம் கந்தசுவாமியார் கோவில் வருடாந்த மகோற்சவம் நாளை 9ம் திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தேர்த்திருவிழா 18-ம் திகதி வியாழக்கிழமையும் தீர்த்தத் திருவிழா 19ம் திகதி வெள்ளிக்கிழமையும் பூங்காவனத் திருவிழா 20ம் திகதி சனிக்கிழமையும் நடைபெறும். (13?)

## கோழிகளுக்கு நோய்தடுப்பூசி

(பண்டத்தரிப்பு)

வட்டுக்கோட்டை கால்நடை வைத்திய அதிகாரியின் அலுவலகத்தில் கோழிகளுக்கு நோய்தடுப்பு ஊசி மருந்துகள் கடந்த வாரம் வந்து சேர்ந்துள்ளன.

கோழிக்குஞ்சுகளுக்கு ஒரு மாத வயதிலும், நான்குமாத வயதிலும் இந்த அம்மை நோய்த் தடுப்பு ஊசி மருந்தினை இந்த அலுவலகத்தில் போடுவிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சண்டிலிப்பாயிலுள்ள சங்கானை கால் நடை வைத்திய அதிகாரியின் அலுவலகத்திலும் கோழிகளுக்கு அம்மை போடுக்கவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. [62]

## கலை விழா

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கவின் கலைக் கல்லூரி மாணவர்களின் ஒருங்கிணைந்த கலை, நடன, நாடக, இசை வெளிப்பாட்டு விழா உருத்திரபுரம் மகாவித்தியாலய திறந்தவெளியரங்குல் நடைபெற்றது. (33

## மரக்கன்றுகள் பராமரிப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த வருடம் மாவீரர் தினத்தினை ஒட்டி தமிழீழ ஆய்வுநிறுவனத்தினால் வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி பகுதிகளில் வீதிஓரங்களில் நடுகை செய்யப்பட்ட மரக்கன்றுகள் கூடுகள் அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன.

தற்போது விறகுத்தேவைக்காவும் பிற தேவைகளுக்காகவும் மரங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன. இது சூழல் சமநிலையைப் பெரிதும் பாதிக்கும் என்பதைக் கருத்திற்கொண்டு யாழ். மாவட்ட தமிழீழ ஆய்வு நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் காடு வளர்ப்பு திட்டத்தின் கீழ் இம்மரங்கள் பராமரிக்கப்படுகின்றன.

## பாராட்டு விழா

(டலோலி)

உடுத்துறை மகாவித்தியாலயத்தில் பல்கலைக்கழக புகுமுகத்திற்கான அனுமதிபெற்ற மாணவர்களுக்கான பாராட்டு விழா உடுத்துறை மகாவித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்றது. (61)

## கண்டன தீர்மானம்

(கொக்குவில்)

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தில் அண்மையில் விமானக் குண்டு வீச்சினால் உண்டான உயிர்ச்சேதம் மற்றும் ஆலய இடிபாடுகளை வன்மையாகக் கண்டித்து கொக்குவில், தாவடி வேம்படி முருகன் ஆலய தர்மகர்த்தா சபை தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. [35]

## பொங்கல் விழா

(வட்டுக்கோட்டை)

சித்தன்கேணி கலைநகர் கம்பம்புலோவ ஆதி வைரவர் கோவில் வருடாந்தப் பொங்கல் பெருவிழா இம்மாதம் 12ம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. (139)

## அன்பளிப்பு

[பருத்தித்துறை]

கட்டைவேலி நெல்லியடி பலநோக்குக்கூட்டுறவுச்சங்கம் பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலைக்கு பெற்றோமக்ஸ் ஒன்றை அன்பளிப்புச் செய்துள்ளது. (52)

## சாம்பியன்கள் தெரிவு

(வட்டுக்கோட்டை)

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டத்தினால் கோட்ட மட்டத்தில் 10 கொத்தணிகளுக்கிடையே நடத்தப்பெற்ற மெய்வல்லுநர் போட்டியில் பின்வருவோர் சாம்பியன்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

15 வயதுக்குக் கீழ் ஆண்கள் பிரிவு:- செ. சுகிதன் (தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி) பெண்கள் பிரிவு க. சாந்தினி (மாரீசன்கூடல் சுப்பிரமணிய வித்தியாலயம்)

17 வயதுக்குக் கீழ் ஆண்கள் பிரிவு- க சுபாஸ்கரன் [இளவாலை ஹென்ரியரசர் கல்லூரி] பெண்கள் பிரிவு- ஜீன் டிலாந்தி பிரான்ஸிஸ் [இளவாலை கன்னியர் மடம்]

19 வயதுக்குக் கீழ்:- ஆண்கள் பிரிவு- நா. திலகராஜ் (தெல்லிப்பழை மகாஜனக கல்லூரி) பெண்கள் பிரிவு- தி. சுஜிதா [பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி) [139]

---

உ

## உபநயன முகூர்த்த அழைப்பு

அன்புடையீர்

நிகழும் மங்களகரமான ஆங்கிரச வருடம் வைகாசித் திங்கள் 28-ம் நாள் (10-6-92) புதன்கிழமை காலை 8-00 முதல் 9-30 மணிவரையுள்ள சுபமுகூர்த்தத்தில்

எமது சுவீகாரப்புத்திரன்

**சிரஞ்சீவி ஜெயந்திநாதனுக்கு**

நீர்வேலி கந்தசுவாமி தேவஸ்தானத்தில் தாலி அத்தருணம் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் சமூகமளித்து ஆசீர்வதிக்கும்படி வேண்டிக் கொள்ளுகிறோம்.

வரவேற்பு:—

பி ப 5 00 மணிக்கு நுணாவில் குளம் கண்ணகை அம்பாள் தேவஸ்தானத்தில் நடைபெறும்.

அன்புடன்:

பிரம்மஸ்ரீ ச. சிவகடாச்சசர்மா தம்பதிகள்.

நுணாவில் குளம், நுணாவில். [சி-6401]

---

# திருமண நாள் வாழ்த்து



## கருணா சுமதி தம்பதிகள்

சுவிஸில் கடந்த வருடம் ஜூன்மாதம் திருமணம் செய்து ஓராண்டு நிறைவு பெற்றுள்ள கருணா — சுமதி தம்பதிகளை பல்லாண்டுகாலம் முருகன் அருள்பெற்று சீரும் சிறப்புடனும் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

திரு. திருமதி நா. கனகரெட்ணம் (ஐபோம்)
தம்பதிகள்
''சுபா அகம்''
காந்திஜி வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

திரு. திருமதி வ. பசுபதி
தம்பதிகள்
''கிருபா இல்லம்''
82/6, 3-ம் ஒழுங்கை,
ஆரியகுளம்,
யாழ்ப்பாணம்.

(சி 6402)

---

## கலையரசு கலைக்கழக நாடகப் பயிற்சிக் கல்லூரி

மானிப்பாய்

யாழ் கல்வித்திணைக்கள அனுமதியுடன் நடாத்தும்

ஈழத்து நாடகத்தந்தை

**கலையரசு சொர்ணலிங்கம்**

# நூற்றுண்டு விழா போட்டிகள்

''கலையை வளர்ப்போம் - கலைஞரை மதிப்போம்''

போட்டிகள் பாடசாலை மாணவர்களுக்கானது

**விண்ணப்ப முடிவு திகதி: 10-06 1992**

நடைபெறும் இடம்: மானிப்பாய் இந்துக் கல்லூரி

(1) பேச்சுப் போட்டி
(2) கட்டுரைப்போட்டி
(3) வினாவிடை
— மனனப் பிரதியை ரூபா 20 செலுத்தி முன்கூட்டியே பெறலாம். கலையரசு பற்றியும், கலைகள் பற்றியதுமான விடயங்களும், வினாக்களும் இடம்பெறும். 27-06-1992 சனி மு. ப. 8-30 தொடக்கம்

(4) நாடகப் போட்டி — 18-07-1992 சனி மு ப. 8-30 தொடக்கம் (அரை மணித்தியாலம்) மேலதிகம் 15 நிமிடம். நாடகம் தவிர்ந்த போட்டிகளில் ஆணோ, பெண்ணோ ஒரு பாடசாலையில் ஒருபிரிவில் இருவர்மட்டும் கலந்து கொள்ளலாம்.

(5) நூற்றுண்டு விழா: 26-07-1992 ஞாயிறு மு. ப. 8-30 தொடக்கம்.

முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்களுக்கு பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படும்.

(6) பிரிவுகள்:

| | | |
|---|---|---|
| அதி மேற்பிரிவு: | ஆண்டு | 12, 13 |
| மேற் பிரிவு: | ,, | 10 11 |
| மத்திய பிரிவு: | ,, | 7, 8, 9 |
| கீழ்ப்பிரிவு: | ,, | 5 6 |
| பாலர் பிரிவு: | ,, | 3, 4 |

அன்பளிப்பு:

கே. ஜீ. எம். போட்டோ,
கலர்ப் படப்பிடிப்பாளர்,
அரசடி ரோட், நவாலி.

ஸ்கை வீடியோ மூவிஸ்
நவாலி ரோட்,
ஆனைக்கோட்டை.

தொடர்பு முகவரி:

இயக்குநர்,
கலையரசு நாடகப் பயிற்சிக் கல்லூரி,
கனகசபை வீதி, (சி 6399) மானிப்பாய்.

# ★ திருமலை மாவட்டத்தில் சிங்களக் குடியேற்றம் விஸ்வரூபம்; பௌத்தவிகாரை கட்ட தமிழ்ப்பகுதி அபகரிப்பு

(திருமலை)

திருமலை மாவட்டத்தில் வருடாந்தம் 15,000 சிங்களக் குடும்பங்களை குடியமர்த்த திட்டங்கள் தீட்டப்பட்டு தீவிரமாக செயற்படுத்தப்பட்டு வருகிறது. இதன் ஒரு கட்டமாக பாலம்போட்ட ஆறுப் பகுதியில் 400 குடும்பங்கள் குடியமர்த்தப்படவுள்ளன.

திருமலை சீனன் குடாப்பகுதியில் கொழும்பு கட்டுநாயக்கா விமான நிலையப்பகுதியில் இருப்பதுபோல சுதந்திர வர்த்தக வலயமொன்று நிறுவப்படவுள்ளது. இதன் மூலம் பல சிங்களக் குடியேற்றங்களையும் வேலை வாய்ப்புக்களையும் வழங்க அரசு திட்டமிட்டுள்ளது.

திருமலை மாவட்டத்தில் பல்வேறு அபிவிருத்திகளுடன் கூடிய பல வீடமைப்புத் திட்டங்கள் விரைவில் அமையவுள்ளன.

பாலம்போட்டாறுப் பகுதியில் ஆரம்ப நடவடிக்கையாக 400 சிங்களக் குடும்பங்கள் குடியமர்த்தப்படவுள்ளன. இது ஒரு பாரிய குடியேற்றத் திட்டமாகும். குறுகிய காலத் திட்டம் என்ற அடிப்படையில் வீடுகள், நீர் வினியோகம், மின்சாரம் மற்றும் பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்த துரித திட்டங்களை வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சும், நகர அபிவிருத்தி அதிகார சபையும் ஒருங்கிணைந்து செயற்படுத்தவும் நடைமுறைப்படுத்தவும் உள்ளன.

இதனிடையே பாலம்போட்டாறு குடியேற்றத் திட்டமானது பரந்த அடிப்படையைக் கொண்டுள்ளது. தமிழ் மக்கள் பூர்வீகமாக வாழ்ந்து வந்த பாலம்போட்டாறுப் பகுதியிலிருந்து தமிழர்களை வெளியேற்றி, அவர்களுக்கு வேறு இடங்கள் கொடுக்கப்படவுள்ளது.

பாலம்போட்டாறு என்பது சீனன்குடாவுக்கும் தம்பலகாமத்திற்கும் இடைப்பட்ட பகுதியாகும். இந்த குடியேற்றத்திட்டங்கள் ஆரம்பமானதும் சீனன்குடா வர்த்தக வலயம், பாலம்போட்டாறு, தம்பலகாமம் ஆகிய மூன்று பகுதிகளையும் உள்ளடக்கி குடியேற்றம் விரிவடையும். இந்த புதிய திட்டத்தினால் பாலம்போட்டாறு (மங்கி பிறிஜ்) தம்பலகாமம், சீனன் குடா, குறிஞ்சாக்கேணி உட்பட பல்வேறு பூர்வீக தமிழ்க் கிராமங்கள் தானாகவே முற்றாக அழிந்துபோகும்.

தமிழர் வாழ்ந்த பகுதிகளில் ஏன் அவர்கள் வாழ்ந்த வீடுகளில் கூட இன்று சிங்களவர் குடியேறியுள்ளனர். மொத்தத்தில் திருமலை மாவட்டத்தில் சிங்களக் குடியேற்றம் விஸ்வரூபமெடுத்துள்ளது.

திருமலை நகர்ப்புறப்பகுதியில் தமிழ்க் கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களும், வீடுகளுமாக சுமார் மூன்றரை ஏக்கர் நிலம் பௌத்த கோயிலுக்கு எடுக்கப்பட்டுள்ளது.

இவற்றையெல்லாம் பார்க்கும்போது வடக்கு-கிழக்கு யுத்தம் அடுத்த ஒரு சில வருடங்களுக்கு நீடிக்குமேயானால் வடக்கு-கிழக்கில் அமைதியும் சமாதானமும் வருவதற்கு முன்பே 'எல்லாம் முடிந்துவிடும்' போல் தெரிகிறது.

(சி)

## தடை உத்தரவை மறுபரிசீலனை செய்க

(பண்டத்தரிப்பு)

சித்த ஆயுர்வேத வைத்தியர்களினால் அரசாங்க, கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுவரும் 14 நாட்களுக்கு மேற்பட்ட நாட்களுக்கான வைத்திய அத்தாட்சிப்பத்திரத்தை கைதடி சித்த ஆயுர்வேத போதனா வைத்தியசாலை வைத்தியப் பொறுப்பதிகாரி சிபார்சு செய்வது ஒருவருடகாலமாக மேலிடத்தின் உத்தரவின்பேரில் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

வடஇலங்கை சித்த ஆயுர்வேத வைத்தியர்கள் சம்மேளனத்தின் அமைப்பாளர் டாக்டர் சுகந்தன் இன்னாசித்தம்பி இதுகுறித்து கொழும்பிலுள்ள ஆயுர்வேத ஆணையாளருக்கு அனுப்பிவைத்துள்ள மகஜர் ஒன்றில்:

இவ்வாறு நிறுத்திவைக்கப்பட்டுள்ளமையால் 14 நாட்களுக்கு மேல் வைத்திய அத்தாட்சிப்பத்திரம் பெறும் நோயாளர்கள் பெரிதும்பாதிக்கப்பட்டுள்ளதாகவும் வைத்தியர்களுக்கும் இதனால் பல சிரமங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் ஆகவே இதை மறுபரிசீலனை செய்து மீண்டும் கைதடி வைத்தியசாலை பொறுப்பதிகாரி சிபார்சுசெய்ய அனுமதி வழங்குமாறும் கேட்டுள்ளார்.

### விளையாட்டுப் போட்டி

(புலோலி)

பொலிகண்டி ஒற்றுமை விளையாட்டுக்கழகத்தின் விளையாட்டுப்போட்டியும் கலை விழாவும் நாளை 9ம் திகதியும் நாளைமறுதினம் 10ம் திகதியும் நடைபெறவுள்ளது. (61)

## ஆயுர்வேத வைத்தியத்தை வடக்கில்வளர்க்க முயற்சிக்க வேண்டும்

(கிளிநொச்சி)

''தென் இலங்கையில் ஆயுர்வேத வைத்தியத்தை வளர்க்கவும் அதைப் பின்பற்றவும் பலவிதமுயற்சிகள் எடுக்கப்படுவதுடன் அதற்கு புத்தாக்கமும் அளிக்கப்படுகிறது, ஆனால் தமிழ் பிராந்தியங்களில் இந்த நிலை இல்லாமல் இருப்பது கவலைதரும் விடயமாகும்''.

இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட சித்த ஆயுர்வேத வைத்திய சங்க பொதுக் கூட்டத்தில்பிரதம விருந்தினராக கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகையில் மாவட்ட பதில் சுகாதார அதிகாரி திரு. சிவசுப்பிரமணியம் கூறினார்.

கிளிநொச்சி கனிஷ்ட மகாவித்தியாலயத்தில் சிறப்பு விருந்தினர்களாக அதிபர்கள் ஜே. எம். பி. ஜெயராசா. எஸ். கனகரத்தினம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

சுகாதார அதிகாரி திரு.சிவசுப்பிரமணியம் மேலும் பேசுகையில்;

ஆங்கில மருத்துவத்தால் குணப்படுத்த முடியாத பல நோய்களை சுதேச மருத்துவத்தால் குணப்படுத்தமுடியும். சத்திர சிகிச்சைகள் மூலம் குணப்படுத்த முடியாத பல நோய்களை ஆயுர்வேத மூலிகைகள்மூலம் குணப்படுத்த முடியும். மேலும் பக்கவிளைவுகளும் இவ்வைத்தியத்தில் இல்லை

எனவே இம்மருத்துவத்தை வடக்கில் மேலும் வளர்க்க வைத்திய சங்கங்கள் முயற்சி எடுக்க வேண்டும் என்றார்.

டாக்டர் கே. திருலோகமூர்த்தி தலைமையில் இக்கூட்டம் இடம்பெற்றது. டாக்டர்கள்; அ. ஸ்ரீரங்கநாதன், சுப்பிரமணியம், மா. சபாநாதன், ராதா ஆகியோரும் உரையாற்றினார்கள். (83)

## இராசிபலன்

08-06-1992

திங்கட்கிழமை

(தமிழுக்கு வைகாசி 26)

அட்டமி பி. ப. 4-39 வரை. பூரம் மு. ப. 10-32 வரை. இராகுகாலம் காலை 7-22முதல் 8-52 வரை. சுபநேரம் காலை 11-52 முதல் 1-22 வரை.

மேடம்; இஷ்டசித்தி. செல்வாக்கு, நண்பர் பிரிவு.

இடபம்: சொற்களில் கடுமை, மனச்சிக்கல், அலைச்சல்.

மிதுனம்: முயற்சிகளில் தோல்வி, ஏமாற்றம், போசனை

கடகம்: பெரியோர் சகாயம், மாதா அன்பு, காரியசித்தி.

சிங்கம்: பணச்சிக்கல். எதிரிகளால், இடைஞ்சல், வெறுப்பு.

கன்னி: கடமையுணர்ச்சி, சவால். குடும்ப மகிழ்ச்சி.

துலாம்: தடுமாற்றம், விதியை நோதல், பணமுடை.

விருச்சிகம்: கற்பனை மிகுதி, அதிகபிரசங்கம், காரியசித்தி.

தனுசு: வேலைப்பளு, அதிருப்தி, மனப்பிரம்மை,

மகரம்: நாணய குறைவு, பலவீன நிலை, உடல் உபாதை.

கும்பம்: ஒதுங்கிப்போதல், மனச்சஞ்சலம், கோப உணர்வு.

மீனம்: புதிய உபாயம். தேவையான மாற்றம், பண வரவு.

ஜோஸ்யர்

## விசர்நாய்க்கடி தடுப்பூசி சிறிய தொகை மருந்தே அனுப்பிவைக்கப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

குபணக்கப்பலில் அரசினால் யாழ். மாவட்டத்திற்குஅனுப்பிவைக்கப்பட்ட விசர்நாய்க்கடி தடுப்பூசி மருந்து சிறிதளவு தொகையே எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சிறிதளவு தொகையினை யாழ். மாவட்டத்தில் உள்ள ஆதார வைத்தியசாலைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

ஆனால் ஏற்கனவே விசர்நாய்த் தடுப்பூசி மருந்து செலுத்துவதற்கு பதியப்பட்டவர்களுக்குக்கூட வந்திருக்கின்ற மருந்து காணமலுள்ளதாக சுகாதாரத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ் போதனா வைத்தியசாலையில் சிறிதளவு தொகை மருந்தே வழங்கப்பட்டுள்ளது. பதியப்பட்டிருப்போருக்கு போடுவதற்கு காணாதநிலைஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (56)

## போரூட் பிரதிநிதிகள் முகாம்களை பார்வையிட்டனர்

(வட்டுக்கோட்டை)

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் போரூட் ஸ்தாபனத்தினரால் நடத்தப்பட்டுவரும் 21 அகதிமுகாம்களில் 11 அகதி முகாம்களைக் கொழும்பிலிருந்து புதன் கிழமை யாழ்ப்பாணத்திற்கு வந்திருந்த போரூட் பிரதிநிதிகள் நேரில் பார்வையிட்டனர்.

கடந்த வியாழக்கிழமையும் வெள்ளிக்கிழமையும் வலிமேற்குப் பிரிவு போரூட் ஸ்தாபனத்தில் தங்கியிருந்த போரூட் வதிவிடப் பிரதிநிதி போல் கென்றிக் சீலன் (நோர்வே நாட்டவர், திட்டப்பணிப்பாளர் திரு. எம் எவ். மரிக்கார், திட்ட அதிகாரி திரு.சி. சற்குணராசா, திட்ட உதவி அதிகாரி திரு. லக்ஷ்மி ரஞ்சன் ஆகியோரை யாழ். மேற்கு போரூட்டின் சிரேஷ்ட திட்ட இணைப்பாளர் திரு க. கணேசலிங்கம் 11 அகதி முகாம்களுக்கு அழைத்துச்சென்று காண்பித்தார். (139)

## சனசமூக நிலைய சமாசம் கலைகலாச்சார போட்டிநடத்த ஏற்பாடு

[கொழும்புத்துறை]

யாழ். மாநகர சபை சனசமூக நிலையங்களின் சமாசம் கல்வி, கலை. கலாசாரப்போட்டிகளை நடாத்தத் தீர்மானித்துள்ளது.

யாழ். மாநகர சபைப்பகுதி சனசமூக நிலையங்களுக்கிடையிலான சிறுகதை, கவிதை, கட்டுரை ஓவியப் போட்டிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படவுள்ளன.

மரபுவழி இசை நாடகப் போட்டி அகில இலங்கை ரீதியில் நடாத்தப்படுமென்றும், இம்மரபுவழி இசை நாடகம் ஒன்றரை மணித்தியாலம் கொண்டதாக அமையுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஆகஸ்ட் மாத பிற்பகுதியில் இப்போட்டிகள் நடாத்தப்படவுள்ளன. (154)

## தீவிபத்து மூவர் காயம்

(அரியாலை)

யாழ்.காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துக்கு அருகாமையில் உள்ள வீடு ஒன்றில் கடந்த வியாழன் இரவு ஏற்பட்ட தீவிபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த எஸ் புஸ்பராசா, திருமதி லோமினா புஸ்பராசா, செல்வி எமீல்டா ஆகியோர் எரிகாயத்துக்குள்ளாகி யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். [59]

## அடையாள அட்டைகள்

(மானிப்பாய்)

யாழ். ஆட்பதிவுத் திணைக்களத்திற்கு வந்து சேர்ந்த தேசிய அடையாள அட்டைகள் தற்பொழுது யாழ். மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களுக்கும் அனுப்பிவைக்கப்படுகின்றன. (71)

## பொதுச் சபை கூட்டம்

(கொக்குவில்)

கொக்குவில் இந்துக்கல்லூரி ஆசிரிய கழக பொதுச்சபைக் கூட்டம் எதிர்வரும் 10-ம் திகதி கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. (135)

## ★ சர்வசமய சமூக ஒன்றியங்கள் நாளை வழிபாட்டிடங்களில் மணி ஒலிக்க பிரார்த்தனை

(யாழ்ப்பாணம்)

தமிழ்ப் பிரதேசங்களில் மத வழிபாட்டு தலங்கள் அரச படையினால் கண்மூடித்தனமாக அழித்தொழிக்கப்படுவதை நிறுத்துமாறு கோரி நாளை மாலை சகல இந்து, கிறிஸ்தவ ஆலயங்களில் பிரார்த்தனை நடைபெறும்.

பிரார்த்தனையைத் தொடர்ந்து சகலவழிபாட்டுத் தலங்களிலும் நமது கண்டனத்தை ஆத்மீகவழியில்நினைவு கூருமுகமாக மாலை ஆறுமணி முதல் ஆறு ஐந்துவரை ஒரே நேரத்தில் ஆலய மணிகளை ஒலிப்பதென இந்நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்துள்ள 'சர்வ சமய சமூக ஒன்றியங்கள்' அறிவித்துள்ளன.

இவ்வமைப்பினால் கடந்த வெள்ளிக்கிழமை பிரமாண்டமானதொரு மௌன ஊர்வலம் நடாத்தப்பட்ட போது எமது போராட்டம் தொடர்ச்சியாக நடைபெறுமென்றும், அடுத்த நடவடிக்கையாக தியான வழியில் செவ்வாய்க்கிழமை மாலை சகல வழிபாட்டுத்தலங்களிலும் பிரார்த்தனை நடத்தி மணியோசைஎழுப்புவதென சர்வமத தலைவர்கள் அறிவித்திருந்தனர். (எஸ்-56)

### கண்டெடுக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ், பிறவுண் வீதியில் கலட்டி சீனியர் ஒழுங்கையை சேர்ந்த இ. கிருஷ்ணதேவியின் அடையாள அட்டையுடன் பேர்ஸ் ஒன்று கொட்டடி கிராம அலுவலர் சு. பாலச்சந்திரனால் கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அத்தாட்சி காட்டிப் பெற்றுக்கொள்ளலாம்.

## தெல்லிப்பழை உ. அ. அதிபர் அலுவலகம்

(மானிப்பாய்)

தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் தற்பொழுது உடுவில் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் தற்காலிகமாக இயங்கி வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (71)

# பிரதேச வேறுபாடுகளை மறந்து விடுங்கள் யோகி உரை

(யாழ்ப்பாணம்)

"பிரதேச வேறுபாடு, சாதி சமய முரண்பாடுகளுக்கு அப்பாற்பட்ட நிலையிலேதான் எமது விடுதலைப் போராட்டம் நடந்துகொண்டிருக்கிறது.

எவ்வளவு காலத்திற்கு நாம் நாடிழந்து, மொழியிழந்து அகதிகளாக வாழப்போகின்றோம். நாம் எல்லோரும் இவ்வகையான வேறுபாடுகளை மறந்து, ஒன்றிணைந்து போராட்டத்தை நடத்த முன்வரவேண்டும்."

நேற்றிரவு அரியாலை கிறந்த வெளிஅரங்கில் நடைபெற்ற கலைவிழாவில் சிறப்புரை நிகழ்த்தியபோது திரு. யோகரட்ணம் யோகி இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது.

இன்று யாழ்.மாவட்டத்தில் 10 இலட்சம் மக்கள் வாழ்கிறார்கள். 10 ஆயிரம் பேர் போராட்டத்தில் இணைந்திருக்கிறார்களா? எத்தனை பேர் விடுதலைப் பற்றோடு உள்ளனர் எங்களுக்கு விடுதலை உணர்வு வேண்டும்.

ஒன்றுபட்ட தேசம், ஒன்றுபட்ட மக்கள், மண்ணின் உணர்வு, மண்ணின் விடுதலை. இவை பற்றியே நாம் சிந்திக்க வேண்டும். சாதாரண பிரச்னைகளைப் பெரிதுபடுத்தாதீர்கள். [56, 75]

## தமிழ் அகதிகள் பீதியில் வாழ்கின்றனர்

(மட்டக்களப்பு)

வாழைச்சேனை பேய்த்தாலையில் பலவந்தமாக குடியேற்றப்பட்ட முத்துகல பகுதி தமிழ்மக்கள் மீது முஸ்லிம்கள் வன்முறைகளை மேற்சொள்ளத் தொடங்கியுள்ளனர்

இந்தப் பகுதிக்கு அடிக்கடி விஜயம் செய்யும் முஸ்லிம்கள் தமிழ் மக்களை கொலைசெய்யப் போவதாக பயமுறுத்திவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பிரதேசத்திலுள்ள இராணுவததினரும் இந்தப் பயமுறுத்தல்களைகவனிப்பதும் இல்லை. இதனால் தமிழ்மக்களிடையே பீதி ஏற்பட்டுள்ளது.

பேய்த்தாலையில் குடியமர்த்தப்பட்ட தமிழ்மக்களும் வெளியேறமுடியாதபடி ராணுவமும் தடுத்து வருகிறது.

கடந்த மார்ச் மாதம் 29ம் திகதி முத்துகல கிராமத்தில் முஸ்லிம்களால் 92 தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டதையடுத்து அகதிகளாகிய தமிழ்மக்கள் பேய்த்தாலையில் பலவந்தமாகக் குடியமர்த்தப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## தடுப்புக் காவலில் தடுத்து வைக்கப்பட்டிருப்போர் உயர்நீதிமன்றில் முறையிடலாம்

[கொழும்பு]

தடுப்புக் காவலில் தடுத்து வைக்கப்பட்டிருப்போர் தாம் சட்டவிரோதமாக தடுத்து வைக்கப்பட்டிருப்பின் உயர் நீதிமன்றத்தில் முறையிடலாம் என ஜனாதிபதி செயலகத்திலிருந்து நேற்று விடுக்கப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அவ்வறிக்கையில் குறிப்பிட்டிருப்பதாவது: தடுத்து வைக்கப்பட்டிருப்போருக்கு, முறையிடு செய்யும் உரிமை உண்டு.

நாட்டில் உள்ள 5 முகாம்களிலும் 5,465 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் பற்றிய தகவல்களை மனித உரிமைக் குழுவும் பதிவு செய்துள்ளது.

கம்பியூட்டரிலும் பதிவுசெய்யப்பட்டிருப்பதால், ஒருவர் பற்றிய தகவல்களையும் உடனடியாக அறிந்துகொள்ளலாம். (சு)

## பதவி உயர்வு

(பருத்தித்துறை)

வடக்கு - கிழக்கு பகுதிகளின் உள்ளூராட்சி மன்றங்களில் பணிபுரியும் பதினொரு லிகிதர்களை வடக்கு- கிழக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களம் முதலாம்தர லிகிதர்களாகப் பதவி உயர்த்தியுள்ளது. (52)

## சீனி கிலோ 23 ரூபா 60 சதம்

[கொழும்பு]

தனியார் இறக்குதி செய்யும் வெள்ளை சீனியின் விலை கிலோவுக்கு 20 சதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. ஆனால் பழுப்பு சீனியின் விலையில் மாற்றம் இல்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி ஒரு கிலோ வெள்ளை சீனியின் விலை கிலோ 23-40 சதத்திலிருந்து 23.60 சதமாக உயர்த்தப்பட்டுள்ளது. (க)

## மினி கண் சிகிச்சை முகாம்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவு மேல் மாடியில், இன்று தொடக்கம் மினி கண் சிகிச்சைப் பிரிவு இயங்கவுள்ளது.

இன்று முதல் கண் சிகிச்சை கிளினிக்குக்கு வருபவர்கள், காலை 6.00 மணியில் இருந்து மேற்படி சிகிச்சைப் பிரிவுக்குச் செல்லலாம் என அறிவிக்கப்படுகிறது (56)

## வீரச் சாவு

(சட்டுவன்)

கட்டுவன் பகுதியில், விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்திற்குமிடையில் நேற்று ஏற்பட்ட திடீர் மோதலில், லெப். தமிழன் அல்லது பீற்றர் (கேதீஸ்வரன் மகேஸ்வரன் - துணைவி, வட்டுக்கோட்டை) வீரச் சாவைத் தழுவிக்கொண்டார்.

இவருக்குப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

## வீடு பார்க்கச் சென்றவர் இதுவரை இரும்பவில்லை

(யாழ்ப்பாணம்)

வலி வடக்கு இராணுவ நடவடிககைகளின்போது தெல்லிப்பளை பிராங்கொடையிலிருந்து வெளியேறி மீண்டும் தமது வசிப்பிடத்திற்கு சென்றவர் இன்று வரையில் திரும்பவில்லை என உறவினர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தெல்லிப்பளை பிராமி கொடையைச் சேர்ந்த முருகையா (60 வயது) என்பவரே திரும்பி வரமுடியாத நிலையில் இராணுவத்திரிடம் அகப்பட்டிருக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது (56)

### புவி உச்சிமாநாடு

(1ம்-பக்கத் தொடர்ச்சி)

டுக் குழுவின் அமெரிக்கத் தலைவர் வில்லியம் ஜெலி கேட்டுள்ளார்.

இதேவேளை, அமெரிக்க ஜனாதிபதி வேட்பாளரான பில் கிளின்டன், ஜோர்ஜ் புஷ் மேற்படி ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதில்லை என எடுத்த தீர்மானத்தைக் கண்டித்துள்ளார்.

உலகப் பாதுகாப்பு ஒப்பந்தம், தாவர-விலங்கு ஒப்பந்தம் ஆகிய இரண்டிலும் கைச்சாத்திட, பிரேசிலில் உள்ள றியோடிஜெனரோ நகரத்தில் உலகப் பிரதிநிதிகள் கூடியிருக்கின்றனர் எனபது குறிப்பிடத்தக்கது. (சு)

### தெரிவுக் குழுவை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாஸா கட்சிகளின் தலைவர்களை இம்மாதம் [illegible] திகதி சந்திக்கவுள்ளார்.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிலிருந்து ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தற்காலிகமாக ஒதுங்கிக்கொண்டதை அடுத்து அந்தக் குழுவின் செயற்பாடு ஸ்தம்பிதம் அடைந்தது தெரிந்ததே. (க)

### இந். பிரதமரின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களிடமிருந்து திட்டம் பற்றியும் வேறுதகவல்களைப் பெறுவதிலும் பொலிசார் ஈடுபட்டுள்ளனர். (கே)

## முத்தமிழ்விழா

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக் கழகம் நடாத்தும் மாபெரும் முத்தமிழ்விழா ஜூலை மாதம் ஐந்தாம் திகதி மன்னார் மாவட்டத்தில் ஆரம்பமாகிறது.

அதனைத் தொடர்ந்து முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களிலும், இறுதி நாள் நிகழ்ச்சிகள் யாழ். மாவட்டத்தில் 18, 19, 20ம் திகதிகளிலும் நடாத்தப்படவுள்ளது. (56)

## மீனவர்கள் பாதிப்பு

(அரியாலை)

மாமுனை- தாளையடி- செம்பியன்பற்று ஆகிய கிராமங்களைச்சேர்ந்த மீனவர்கள் தாளையடி கடற்பிரதேசத்தல் கடற்படைக்கப்பல் நிற்பதின் காரணமாக அச்சத்தால் கடந்த வியாழக்கிழமை தொடக்கம் கடலுக்கு செல்லவில்லையென தெரிவிக்கப்படுகிறது. (59)

### தென்பகுதி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த வெள்ளம் வடிவதற்கு சுமார் ஒருவார காலம் செல்லுமென்றும். இரத்தினபுரிப் பகுதியில் மழை தொடர்ந்து பெய்வதற்கேற்ற சாத்தியக்கூறுகள் இருப்பதாக வானிலை அவதான நிலயத்தினர் தெரிவித்துள்ளனர்.

சுமார் 493 7 மில்லிமீற்றர் மழை பெய்தது என்றும், கடந்த 116 ஆண்டுகால வரலாற்றில் இது கூடிய மழை வீழ்ச்சி எனவும் கூறப்படுகின்றது.

சுமார் 150கோடி கனஅடி நீரை வெளியேற்றுவதற்கு போதிய கால்வாய்கள் இல்லாதபடியால் புதிய கால்வாய்கள் தோண்டும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மழையினால் ஏற்பட்டவெள்ள அனர்த்தங்களினால் சுமார் 1 லட்சத்து ஐம்பதாயிரம் பேர் வீடு வாசல்களை இழந்துள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (சு, க)

### ஜனவரி முதல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சாளர் ஒருவர் நேற்று கொழும்பில் தெரிவித்தார்.

வடக்கு கிழக்கு சண்டையில் 139 பொதுமக்களும் இக்காலத்தில் பலியாகியதாகவும் காயமடைந்த படையினர் தொகை இரட்டிப்பாக இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. [கே]

### ஐ. தே. க.

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

லாமெனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் சபாநாயகர் அல்ஹாஜ் எம். எச். முகம்மதுவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதத்தை நாடாளுமன்றத்தில் விவாதிக்க ஆளும் ஐ. தே. கட்சி இணங்கியதையடுத்தே கட்சிகளுக்கிடையில் சுமுகநிலை ஏற்படும் வாய்ப்புகள் அதிகரித்துவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க)

### தெல்லிப்பழையில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வில் கடுமையாக துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர்.

துப்பாக்கிப் பிரயோகத்தில் சிலர் காயமடைந்ததாக தெரிவிக்கப்படுகிறது. காயப்பட்டவர்களில் வயோதிபர் ஒருவர் யாழ்.வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தெல்லிப்பளை கிழக்கு ஸ்ரேசனடியைச் சேர்ந்த நடுவிலர் மாதர் 57 வயது என்பவரே படுகாயப்பட்டவராவர். (56)

## 50 கலிபர் தாக்குதல்

[யாழ்ப்பாணம்]

மண்டைதீவுப் பகுதியில் நிலைகொண்டிருக்கும் இராணுவத்தினர் நாவாந்துறை, கொட்டடிப்பகுதிகளைநோக்கி நேற்றுக்காலை 6 மணியளவில் 50 கலிபர் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

வலி வடக்குப் பகுதிகளில் நிலைகொண்டிருக்கும் படையினரும் நேற்று முன்தினமிரவு பல பாகங்களிலிருந்து துப்பாக்கிப் பிரயோகத்தினை மேற்கொண்டிருந்தனர். (56)

## நாய்களுக்கு தடுப்பூசி

(பண்டத்தரிப்பு)

வலி தென்மேற்கு பிரதேச சபையின் பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகத்தின் ஏற்பாட்டின்பேரில் சுகாதார பகுதியினரால் நாய்களுக்கு விசர்நோய் தடுப்பூசி போடப்பட்டது.

பண்டத்தரிப்பு சந்தைக் கட்டிடத்திலும் சில்லாலை புனித கதிரைமாதா ஆலய வளவிலும் வைத்து நூற்றுக்கணக்கான நாய்களுக்கு விசர்நோய் தடுப்பூசி மருந்து போடப்பட்டது. (72)

### தேர்தல் தொகுதி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கூறப்படுகிறது.

கடந்த காலங்களில் தேர்தல் தொகுதி நிர்ணயத்தின் போது, முழுமையாகச் சிங்களத் தேர்தல் தொகுதியாக்கும் நோக்குடன் அம்பாறையைத் தனித் தேர்தல் தொகுதியாக்கியதும் தெரிந்ததே.

மேலும், திருகோணமலையில் சேருவில, மன்னாரில் கஜுவத்த என்பன இத்தகைய நோக்கில் அமைந்த ஆக்கிரமிப்புக்களாகும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இவ்விதமாகத் தமிழ்ப் பிரதேசங்களைத் தனிச் சிங்களப் பிரதேசங்களாக மாற்றும் நடவடிக்கைகளை இலங்கை அரசு மேற்கொள்ளும் சாத்தியக் கூறுகள் இப்பொழுது அதிகரித்துக் காணப்படுவதாக அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். [கே]

### மங்கள முனசிங்க

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நோக்குடன் நியமிக்கப்பட்ட நாடாளுமன்ற தெரிவுக் குழுவை முக்கிய எதிர்க்கட்சியான ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி பகிஷ்கரித்து வருவதனால் தெரிவுக் குழுவின் நடவடிக்கைகள் தடைப்பட்டுள்ளன.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை அணுகி, மீண்டும் அவர்களைத் தெரிவுக் குழுவில் இணைத்துக்கொள்ளுமாறு கேட்கவிருப்பதாகவும் திரு. முனசிங்கா செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

இந்த முயற்சியில் தாம் தீவிரமாக ஈடுபட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

திரு. மங்கள முனசிங்காவும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (கே)

### தமிழ் மக்களை

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தங்கி வாழ்வதால் இந்நெருக்கம் மேலும் அதிகரித்துள்ளது,

ஒவ்வொரு சிறு இராணுவ நடவடிக்கைகளின் போதும் மக்கள் இடம்பெயர்ந்து அகதிகளாக்கப்படுவது சர்வசாதாரண நிகழ்வாக அமைகிறது.

இப்படியான நடவடிக்கைகளினால் தமிழ்மக்கள் மனதில் அச்சம் எழுந்திருப்பதாகவும், தமிழ்மக்களை படிப்படியாக நிரந்தர அகதிகளாக்கவே அரசு முயற்சிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டதாக பி. பி. சி. அதன் செய்தியில் தெரிவித்தது.

அண்மையில் தெல்லிப்பளைப் பகுதியில் ராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட போது அப்பகுதி வெறிச்சோடிக் கிடந்ததாக ராணுவ அதிகாரி கூறியதையும் பி. பி. சி. தெரிவித்தது. (கே)

## கேட்டினை தவிர்க்க காட்டினை வளர்ப்போம்

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 08-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு யூன் மாதம் 08-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post office Sri Lanka under licence Number B/10336/81